DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2024**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | எஸ்டேட் தொழிலாளி |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | |
| த/பெ | - | தங்கராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | கருமலைஎஸ்டேட் | வயது | - | 53 |
| சாதி | - | | | | |

**<u>21.10.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1.ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 1 வருடத்திற்கு முன்பாக தேதி மாதம் நினைவில் இல்லை ஒரு நாள் எங்கள் எஸ்டேட்டில் சசி என்பவரின் மகன் இறந்துவிட்டார். அவரது உடலை வால்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்து டிராக்டரில் ஆஜர் எதிரி ஓட்ட கருமலை எஸ்டேட்டிற்கு கொண்டு சென்றோம். அப்போது அந்த இறப்பிற்கு வந்திருந்த எல்லோரும் அந்த ட்ராக்டரில் ஏறினார்கள். ட்ரைவர் இத்தனை பேரும் ஏறாதிங்க இறந்த நபரை மட்டும் தான் டிராக்டரில் கொண்டு செல்ல முடியும் என்று சொன்னார். ஆனால் அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததால் யாரும் கேட்கவில்லை. சுமார் 60 நபர்கள் டிராக்டரில் ஏறினார்கள். நானும் அந்த டிராக்டரில் ஏறினேன். டிராக்டரில் போகும் வழியில் நடுமலை பாலத்தில் மேற்படி சசி குதித்து தற்கொலை செய்யப்போவதாக சொன்னார். அதனால் அவரை எல்லோரும் பிடித்து இழுக்கும் போது அனைவரும் டிராக்டரில் ஒரு பக்கமாக வந்ததால் டிராக்டர் சாய்ந்துவிட்டது. அதில் மகேஷ் என்பவர் நடுமலை ஆற்றில் விழுந்துவிட்டார். என க்கு இடது தோள்பட்டையில் ரத்தக் காயம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கும் சிறு சிறு காயங்கள் இருந்தது. என்னையும் மகேஷ்சையும் ஆம்புலன்ஸ் மூலமாக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்பு வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். மீண்டும் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக கோயம்புத்துார் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள்.

மேற்படி மகேஷ் கோயம்புத்தூர் மருத்துவமனையில் சிகிச்சை பலனிற்றி இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

பொதுவாக எஸ்டேட்டில் ஒரு நபர் இறந்துவிட்டார் அவர்களது உடலை டிராக்டர் மூலமாக கொண்டு செல்வது வழக்கம் என்றால் சரிதான். ஒரு நபர் இறந்துவிட்டால் அந்த தொழிலாளர் பிரதிநிதி (Workers Committee) பிரதிநிதி எஸ்டேம் நிர்வாகத்திடம் வேண்டிக்கொண்டதின் படி டிராக்டர் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் விபத்து நடந்ததினம் போன டிராக்டர் டெய்லர் 5X 10 அளவு இருக்கும் என்றால் சரிதான். அன்றைய தினம் டிராக்டரில் பயணம் செய்த காயப்பட்டவர்கள் உட்பட அனைவரும்மே மது அருந்திஇருந்தார்கள் என்றால் சரிதான். இறந்த மகேஷ் என்பவரும் மது அருந்தியிருந்தார் என்றால் அவர் அதிகமாக மது அருந்தியிருந்தார். இறந்த சசி என்பவரின் மகன் ராஜாவின் உடலை எஸ்டேட்டிற்கு கொண்டு செல்ல டிராக்டரில் ஏற்றும்போதும் நாங்கள் எல்லோரும் டிராக்டரில் ஏறும் போதும் அங்கு போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.14/2024**
**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | எஸ்டேட் தொழிலாளி |
| பெயர் | - | மணிகண்டன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மாணிக்கம் | சமயம் | - | |
| கிராமம் | - | கருமலைஎஸ்டேட் | வயது | - | 45 |
| சாதி | - | | | | |

**<u>21.10.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1.ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 18.11.2023-ம் தேதி எங்களுடன் எஸ்டேட்டில் தொழிலாளியாக வேலைசெய்யும் சசி என்பவரின் மகன் இறந்துவிட்டார். அந்த செய்தி கேட்டு எங்கள் எஸ்டேட்டில் வேலை செய்யும் தொழிலாளிகள் அனைவரும் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு வந்தோம். இறந்த நபரின் பிரேத பரிசோதனை முடிந்தபின்பு அவரை எஸ்டேட்டிற்கு டிராக்டரில் எதிரி ஓட்ட கொண்டுசென்றோம். அப்போது எஸ்டேட்டில் இருந்து வந்திருந்த தொழிலாளிகள் அனைவருமே அந்த டிராக்டரில் ஏறினோம். ஆஜர் எதிரி டிராக்டரில் இறந்த நபரை மட்டும் தான் கொண்டு செல்லவேண்டும் மற்றவர்கள் ஏறாதிர்கள் என்றுசொன்னார். ஆனால் எங்கள் எஸ்டேட்டிற்கு போவதற்கு பஸ்ஸில் கூட்டமாக இருக்கும் என்பதாலும், பஸ்ஸில் போனால் இறந்த நபரின் இறுதி சடங்கில் கலந்து கொள்ள முடியாமல் போய்விடும் என்பதாலும் நாங்களும் டிராக்டரில் ஏறினோம். டிராக்டர் நடுமலை பாலத்தில் செல்லும் போது மேற்படி சசி தனது மகன் இறந்ததை தாங்க முடியவில்லை என்று பாலத்தில் இருந்து குதிக்கபோனார். அவர் மது அருந்தியிருந்தார். நாங்கள் எல்லோரும் அவரை இழுத்து பிடித்தோம். அப்போது எல்லோரும் ஒரு பக்கமாக வந்ததால் டிராக்டர் கவிழ்ந்துவிட்டது. அதில் மகேஷ் என்பவர் ஆற்றில் விழுந்துவிட்டார். அசா.2 முருகன் பாலத்தில் தொங்கிகொண்டிருந்தார். எனக்கு வலது கை முட்டியில் லேசாக சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. டிராக்டர் கவிழ்ந்ததில் அனைவரும் என் மேல் விழுந்ததால் எனக்கு

நெஞ்சில் அடிபட்டது. மேற்படி மகேஷ் இறந்துவிட்டார். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

மேற்படி விபத்தில் டிராக்டர் முழுமையாக கவிந்ததா அல்லது டிரைலர் மட்டும் கவிழ்ந்ததா என்றால் டிரைலர் மட்டும் கவிழ்ந்தது டிராக்டர் கவிழவில்லை. டடிராக்டரில் மொத்தம் எத்தனை பேர் ஏறியிருப்போம் என்றால் சுமார் 20 பேர் ஏறியிருப்போம். டிராக்டரில் ஏறிய சசி, விபத்தில் இறந்த மகேஷ் மற்றும் காயம்பட்டவர்கள் உட்பட அனைவரும் மது அருந்தியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி டிராக்டர் மற்றும் டிரைலர் நான் வேலை செய்யும் பெரிய கருமலை எஸ்டேட் நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2024**

**2024-**ம் ஆண்டு அக்டோபர் திங்கள் **21-** ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ**.**சா**. 4 -**வது நபரின் வாக்குமூலம் **(1969** ஆம் ஆண்டு **54-**வது விதியின் ஏற்பாட்டின்படி**)** திரு**.**சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது**.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | குருநாதன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மாடசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | தூத்துக்குடி | வயது | - | 50 |
| சாதி | - | | | | |

**<u>21.10.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

ஆஜர் எதிரியை தெரியும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை எனது மகன் வழி பேரன் ராஜா இறந்துவிட்டார். அதற்காக தூத்துக்குடியில் இருந்து வந்தேன். அவரை வால்பாறை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்து டிராக்டரில் எதிரி ஓட்ட கொண்டுசென்றோம். அதே டிராக்டரில் சுமார் 12 நபர்கள் ஏறினோம். டிராக்டரில் போய்கொண்டிருந்தபோது எனது மகன் சசி கீழே குதிக்கபோவதாக சொன்னார். அவனை எல்லோரும் இழுத்து பிடித்தோம். அதில் எல்லோரும் டிராக்டரில் ஒரு பக்கமாக வந்ததால் டிராக்டர் கவிழ்ந்துவிட்டது. அதில் எனக்கு வலது தோள்பட்டை உடைந்துவிட்டது. விபத்து நடந்தவுடன் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் விழித்துபார்த்தபோது வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்தேன். அதில் என் மகனுக்கும் காலிலும், நெஞ்சிலும் அடிபட்டு இருந்தது. மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.14/2024**

**2024-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21- ம் நாள் திங்கள்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | பட்டாச்சு தொழிற்சாலையில் கூலி வேலை |
| பெயர் | - | மாரிச்செல்வம் | வட்டம் | - | |
| த/பெ | - | சண்முகசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | சிவகாசி | வயது | - | 32 |
| சாதி | - | | | | |

**<u>21.10.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

ஆஜர் எதிரியை தெரியும் கடந்த 18.11.2023-ம் தேதி வால்பாறையில் எனது மச்சுனன் சசி என்பவரின் மகன் ராஜாவின் இறப்பிற்காக வந்திருந்தேன். ராஜாவின் உடலை வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து டிராக்டரில் கொண்டுசென்றார்கள். டிராக்டரை ஆஜர் எதிரி ஓட்டினார். எல்லோரும் டிராக்டரில் ஏறவேண்டாம் என்று டிரைவர் சொன்னார். அப்போது மழை அதிகமாக வந்ததால் எல்லோரும் டிராக்டரில் ஏறினார்கள். டிராக்டர் பாலத்திற்கு அருகே போகும்போது சசி பாலத்தில் குதிக்கபோவதாக சொன்னார். எல்லோரும் அவரை பிடிக்கும் போது டிராக்டரில் ஒரு பக்கமாக போனோம். அதில் டிரைலர் கீழே சாய்ந்துவிட்டதில் அதில் எனக்கு கால் எலும்பு வயிற்றில் மற்றும் நெஞ்சில் எலும்புமுறிவு ஏற்பட்டது. காலில் உள்ள எலும்பு முறிவிற்கு அறுவை சிகிச்சை செய்து ராடு வைக்கப்பட்டுள்ளது. அந்த விபத்தில் மகேஷ் என்பவர் தண்ணீருக்குள் விழுந்து இறந்துவிட்டார். மற்றவர்களுக்கு என்ன காயம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லிருந்து குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

**<u>மறு விசாரணை</u>** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.